இதய தெய்வம் **புரட்சித் தலைவி அம்மா** வழியில் செயல்படும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அவர் அமைத்துத் தந்து, கழக ஒருங்கிணைப்பாளரும், மாண்புமிகு தமிழ் நாடு துணை முதலமைச்சருமான **திரு. ஓ. பன்னீர்செல்வம்,** கழக இணை ஒருங்கிணைப்பாளரும், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சருமான **திரு. எடப்பாடி K. பழனிசாமி** ஆகியோரால் திறம்பட நடத்தப்படும் தமிழக அரசும், தமிழ் மொழி காத்து, தமிழ் பண்பாட்டின்படி, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்னும் நெறிப்படி ஒழுகி, சமூக நீதிக் கொள்கைகளிலும், மதச்சார்பின்மையிலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு எல்லோருக்கும் நீதி, யாருக்கும் இல்லை அநீதி என்ற லட்சியத்தோடு வெற்றிநடை போட்டு வருகின்றன.

நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலுக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு **:**

## தேர்தல் வாக்குறுதிகள்

- **வறுமை ஒழிப்பு – அம்மா தேசிய வறுமை ஒழிப்புத் திட்டம் – மாதாந்திர நேரடி உதவித் தொகை ரூபாய் 1,500/– வழங்கும் திட்டம் :** நாடு முழுவதும் வாழுகின்ற வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கும், தங்கள் அடிப்படை வசதிகளை நிறைவு செய்திடத் தேவையான வருமானம் இன்றி அல்லலுறும் மக்களுக்கும் மாதந்தோறும் எவ்வித நிபந்தனையும் இன்றி ரூபாய் 1,500/– வழங்கும் '**அம்மா தேசிய வறுமை ஒழிப்புத் திட்டம்**'. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர், கைவிடப்பட்ட பெண்கள், வருமானமற்ற விதவைப் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், நிலமற்ற விவசாய கூலித் தொழிலாளர்கள், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழும் உடலுழைப்பு தொழிலாளர்கள், ஆதரவற்ற முதியோர் ஆகியோருக்கு மாதந்தோறும் ரூபாய் 1,500/– நேரடியாக அவர்தம் வங்கிக் கணக்கில் செலுத்தும் வறுமை ஒழிப்புத் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

- உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புதிய வேலைவாய்ப்புகளை இந்திய இளம் பெண்களும், இளைஞர்களும் பெறும் வண்ணம் அவர்களுக்கு காலத்திற்கேற்ற பயிற்சியையும், திறன் மேம்பாட்டையும் அளிக்கும் ''எம்.ஜி.ஆர். தேசிய வேலைவாய்ப்பு சார்ந்த திறன் மேம்பாட்டுத் திட்டம்'' பிலிப்பின்ஸ் நாட்டின் ''டெஸ்டா'' TESDA (Technical Education and Skills Development Authority) நிறுவனம், அந்த நாட்டின் இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் உலகெங்கும் வேலைவாய்ப்பு கிடைத்திடும் வண்ணம் வழங்கி வரும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை மாதிரியாகக் கொண்டு நம் நாட்டிலும் புதிய அமைப்பு ஒன்றினை உருவாக்கி இந்திய இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் திறன் மேம்பாடு அளிக்கவும், அத்தகைய பயிற்சிகளைப் பெற்றோர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பு பெறுவதை எளிதாக்கிடவும் புதிய அமைப்பு ஒன்று தேசிய அளவில் உருவாக்கப்பட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

- காவிரி–கோதாவரி நதிநீர் இணைப்புத் திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்த, மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

- வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகப் பகுதிகளுக்கு நீர்ப்பாசனத்திற்காகவும், குடிநீர் தேவைகளுக்காகவும் தண்ணீர் கொண்டு செல்லும் நீர் மேலாண்மை திட்டங்கள் செயல்படுத்தப்படும். பெருமழை வெள்ளக் காலங்களில் வீணாக கடலில் கலக்கும் தண்ணீரை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்ல பின்வரும் புதிய திட்டங்களை செயல்படுத்திட மத்திய அரசை வலியுறுத்தி, நிதி ஆதாரத்தைப் பெற்று, விரைந்து செயல்படுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

  1. நொய்யல் ஆற்றையும், மேற்கு தொடர்ச்சி மலையையும் மையமாகக் கொண்டு மேற்கு தொடர்ச்சி மலையில் பருவ மழைக் காலங்களில் பெறப்படும் மழை, வெள்ள நீரை கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் ஒன்றியப் பகுதி மற்றும் மதுக்கரை வனச்சரகம் வெள்ளப்பதி பிரிவு நண்டக்கரை, முண்டன்துறை, கோவைப்புதூர், போளுவாம்பட்டி வனச் சரகம், நரசீபுரம், தாளியூர் மற்றும் இவற்றைச் சுற்றியுள்ள இடங்களில் தடுப்பணைகளை அமைத்தும், குளம் குட்டைகளில் மழை நீரை நிரப்பியும், நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம்.
  2. காவேரி ஆற்றில் அமைக்கப்பட்டிருக்கும் மோகனூர் தடுப்பணையில் இருந்து நாமக்கல் மாவட்டத்தின், மோகனூர், நாமக்கல், புதுச்சத்திரம், எருமைப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு சென்று நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம்.
  3. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் பயன்பெறும் வகையில், காவேரி (கட்டளை கதவணை), அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு இணைப்பு கால்வாய்த் திட்டம்.

- மாணவ, மாணவியர்கள் இந்தியாவில் கல்வி பயில்வதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், மற்ற வங்கிகளிலும் பெற்றுள்ள கல்விக் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

- வேளாண்மை கடன்களால் அல்லலுறும் விவசாயிகளுக்கு அவர்தம் கடன் சுமையை நீக்கும் வகையில் உறுதியான திட்டம் ஒன்றினை உடனடியாக செயல்படுத்த மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

- கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும். மருத்துவம் போன்ற உயர்கல்வியில் சேர நீட் தேர்வில் இருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

- தாழ்த்தப்பட்ட, மலைவாழ், (SC/ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூக நீதி வழங்கப்படும் வகையில் தனியார் துறைகளின் வேலைவாய்ப்புகளிலும், இடஒதுக்கீடு வழங்க புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

- இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதங்களுக்கு மாறும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும்

இடஒதுக்கீட்டைப் பெறும் வகையில் அவர்களது ஜாதிச் சான்றிதழ்களில் மாற்றமின்றி மதம் மாறுவதற்கு முன் இருந்தவாரே சலுகைகளை பெற்றிட அனுமதிக்கும் வகையில் புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

- ❖ ஈழத் தமிழருக்கு நீதி : ஈழ இறுதிப் போரில் இலங்கை ராணுவம் தமிழர்களை வீழ்த்தி வெற்றி அடைந்ததற்கு, அப்போது நடைபெற்ற திமுக–காங்கிரஸ் மத்திய கூட்டணி அரசு வழங்கிய ராணுவ உதவிகள் அடிப்படைக் காரணமாக அமைந்தன என்று இலங்கை முன்னாள் அதிபர் மகிந்தா ராஜ்பக்சே ஒப்புக்கொண்டிருப்பதால், இலங்கையில் நடைபெற்ற போரில் நிகழ்ந்த போர்க்குற்றச் செயல்களைப் பற்றியும், இனப் படுகொலை பற்றியும், சர்வதேச நீதிமன்றத்தில் முறையான விசாரணை நடத்தப்படவும், இலங்கை ராணுவம் தமிழர்களை அழிப்பதற்கு திமுக–காங்கிரஸ் கூட்டணி அரசு செய்த ரகசிய உதவிகளை வெளிக்கொணரவும் மத்திய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளும்.
- ❖ இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தவாறும், தமிழக அமைச்சரவை பரிந்துரைத்தவாறும், 7 தமிழர்களை உடனடியாக விடுதலை செய்ய தமிழக ஆளுநருக்கு மத்திய அரசும், குடியரசுத் தலைவரும் உரிய ஆணைகளை பிறப்பிக்க வேண்டும் என்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசையும், குடியரசுத் தலைவரையும் வலியுறுத்தும்.
- ❖ சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளை பாதுகாத்திட பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் எந்த முயற்சியிலும் மத்திய அரசு ஈடுபடக்கூடாது என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.
- ❖ இந்திய நாட்டின் அலுவல் மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழியையும் அறிவித்திட வேண்டும் என்று மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.
- ❖ காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.
- ❖ புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு முழு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

**சமூக நீதி, பெண் விடுதலை, மதச்சார்பின்மை, எளியோருக்கு சமூகப் பொருளாதார பாதுகாப்பு, எல்லோருக்கும் சம வாய்ப்பு என்ற லட்சியங்களை நோக்கி பயணிக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் தொண்டாற்றுவதில் என்றென்றும் முன்வரிசையில் நிற்கும் வீரனாக மக்களுக்குப் பணியாற்றும். இந்த இயக்கம் மக்களால் உருவான இயக்கம், மக்களுக்கான இயக்கம் என்ற உறுதிமொழியை மீண்டும் தமிழக, புதுச்சேரி வாக்காளப் பெருமக்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கிறது.**

**நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்களுக்கும், கழகத்தின்**

தலைமையிலான கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும், அவரவர் சின்னங்களில் வாக்களித்து, தமிழகம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் மகத்தான வெற்றி பெறச் செய்திடுமாறு, வாக்காளப் பெருமக்களை அன்புடன் வேண்டுகிறோம்.

** ** ** ** **